DINAMANI 24 AUG 09

உலகம் வெப்பமயமாவதை தடுக்க

# திருப்பூரில் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடல்

## மு.க.ஸ்டாலின் துவக்கி வைத்தார்

**திருப்பூர், ஆக.23:** உலகம் வெப்பமயமாவதை தடுக்க திருப்பூர் மாநகர் முழுவதும் ஞாயிற்றுக்கிழமை ஒரேநாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. விழாவில் துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் கலந்துகொண்டு முதல் மரக்கன்றை நட்டு விழாவைத் துவக்கி வைத்தார்.

சுற்றுச்சூழல் மேம்பாட்டுக்காக ஈஷா யோகா மையத்தின் 'பசுமைக்கரங்கள் திட்டம்' மூலம் தமிழகம் முழுவதும் 11.4 கோடி மரக்கன்றுகள் நடும் பணி தொடர்ந்து நடைபெற்று வருகிறது. அதன் தொடர்ச்சியாக தொழில்மயமாகி வரும் நகரங்களை பசுமைப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட்டுள்ளது.

முதல்கட்டமாக 'பசுமை திருப்பூர் இயக்கம்' மூலம் திருப்பூரை பசுமையாக்க திட்டமிடப்பட்டு அதன் தொடக்க விழா திருப்பூர் டவுன்ஹாலில் ஞாயிற்றுக்கிழமை நடந்தது. விழாவையொட்டி திருப்பூர் மாநகர் முழுவதும் ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. விழாவில் பங்கேற்ற துணை முதல்வர் மு.க.ஸ்டாலின் முதல் மரக்கன்றை (இயல் வாகை) நட்டு வைத்து சேவையை துவக்கினார். பின்னர், செய்தியாளர்களிடம் அவர் கூறியது:

ஈஷா அறக்கட்டளை சுற்றுச்சூழலை மேம்படுத்த பல திட்டங்களை செயல்படுத்துகிறது. அதில் மரக்கன்றுகள் நடும் திட்டம் குறிப்பிடத்தக்கது. மரக்கன்றுகள் நடுவது சுற்றுச்சூழலை மேம்படுத்த மிக அவசியம். மக்களும் இதுபோல் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க வேண்டும் என்றார்.



திருப்பூர் மாநகர் முழுவதும் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடும் பணியை தொடங்கி வைத்த துணை முதல்வர் மு.க.ஸ்டாலின். உடன் அமைச்சர்கள் பொன்முடி, பொங்கலூர் நா.பழனிச்சாமி, மு.பெ.சாமிநாதன், பூங்கோதை, ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ், திருப்பூர் எம்எல்ஏ சி.கோவிந்தசாமி.

2-வது மரக்கன்றை ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜக்கிவாசுதேவ் நட்டுவைத்தார். தொடர்ந்து ஈஷா யோகா மையத்தின் 5 ஆயிரம் தொண்டர்கள் மூலம் மாநகர் முழுவதும் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நடப்பட்டன. இந்த மரக்கன்றுகளை 3 ஆண்டுகளுக்கு பராமரிக்கும் பொறுப்பையும் பசுமை திருப்பூர் இயக்கம் ஏற்றுள்ளது.

விழாவில் உயர் கல்வித் துறை அமைச்சர் பொன்முடி; மாநில தகவல் தொழில்நுட்பத் துறை அமைச்சர் பூங்கோதை, ஊரகத் தொழில் துறை அமைச்சர் பொங்கலூர் நா.பழனிச்சாமி, நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் மு.பெ.சாமிநாதன் உள்ளிட்டோர் பங்கேற்றனர்.

**பசுமை மாரத்தான்:** மரம் நட்டு வளர்ப்பது குறித்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வை ஏற்படுத்தும் விதத்தில் திருப்பூரில் பசுமை மாரத்தான் ஓட்டம் நடைபெற்றது. இதில் பசுமை ஆர்வலர்கள் நூற்றுக்கணக்கானோர் பங்கேற்று ஓடினர். ஆண்கள் பிரிவில் முதல் பரிசை பல்லடத்தைச் சேர்ந்த சசிக்குமாரும், பெண்கள் பிரிவில் கோவையைச் சேர்ந்த வி.பி. ஸ்ரீநிதியும் வென்றனர்.

# திருப்பூரின் சுற்றுச்சூழல் மேம்பட 5 கி.மீ. தூரம் பசுமை வளையம் தேவை

## சத்குரு ஜகிவாசுதேவ்

**திருப்பூர், ஆக.23:** சுற்றுச்சுழலை மேம்படுத்த திருப்பூர் மாநகரை சுற்றி 5 கி.மீட்டர் தொலைவுக்கு பசுமை வளையம் அமைக்க வேண்டும் என்று ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜகிவாசுதேவ் தெரிவித்தார்.

பசுமை திருப்பூர் இயக்கத்தின் சார்பில் திருப்பூரில் ஞாயிற்றுக்கிழமை ஒரே நாளில் 25 ஆயிரம் மரக்கன்று கள் நடப்பட்டன. மாலை நடந்த இதன் நிறைவு விழா வில் ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குருஜகிவாசு தேவ் கடைசி மரக்கன்றை நட்டுவைத்து பேசியது:

திருப்பூரை பசுமையாக்க வாரந்தோறும் ஞாயிற்றுக் கிழமை ஒருமணி நேரம் செலவிட்டு மரம் நட வேண்டும் என்று கடந்த 17 ஆண்டுகளுக்கு முன்பே வலியுறுத்தி னேன். அதை முறைப்படி செய்திருந்தால் இப்போது திருப்பூர் பசுமை மாநகராக மாறியிருக்கும்.

கங்கை என்பது நாட்டு மக்கள் மனதில் முக்கிய இடம் பிடித்த நதி. அந்த நதி சில வருடங்களிலும் ஆண்டு முழுவதும் ஓடாமல் சீஷனுக்கு மட்டும் ஓடும் நிலை ஏற்படும் என்று வல்லுநர்கள் தெரிவித்துள்ளனர். அவ்வாறான சூழல் ஏற்பட்டால் கணக்கிட முடியாத பாதிப்புகள் ஏற்படும். ஏற்கெனவே நாடுமுழுவதும் உள்ள சிறிய சிறிய நதிகள் காணாமல் போய்விட்டன.

இதைமாற்ற நதிகளின் இருபுறத்திலும் மரக்கன்றுகள் நட்டு வளர்க்க வேண்டும். இல்லையென்றால் எதிர்கால குழந்தைகள் நதிகளை புத்தகங்களில் மட்டுமே பார்க்கும் நிலை ஏற்படலாம்.

தற்போது திருப்பூர் மாநகரில் 25 ஆயிரம் மரக்கன்றுகள் நட்டுவைக்கப்பட்டுள்ளது சாதனை அல்ல. இவை மட்டுமின்றி திருப்பூர் மாநகரை சுற்றி சுமார் 5 கி.மீ. தூரத்துக்கு மரங்கள் நட்டுவைத்து பசுமை வளையத்தை ஏற்படுத்தினால்மட்டுமே மாநகர சுற்றுச்சூழலை மேம்படுத்த முடியும். இதை எல்லோராலும் செய்ய முடியும்.

சுற்றுச்சூழலை மேம்படுத்தும் உணர்வு எல்லோருக்கும் தேவை. அந்த உணர்வுடன் மரங்கள் நட்டு வளர்த்தால் தேசிய கொள்கையான 33 சதவீத பசுமைப்பரப்பை விரைவில் எட்ட முடியும் என்றார்.





கூட்டத்தில் பேசுகிறார் ஈஷா அறக்கட்டளை நிறுவனர் சத்குரு ஜகிவாசுதேவ்.